

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் தெ. கௌதம் சிகாமணி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி, கழக செய்தி / தொடர்பு தலைவர் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (11.6.2024) அண்ணா அறிவாலயத்தில், கவிஞர் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் சந்தித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவையொட்டி தான் எழுதி வெளியிட்ட "கலைஞர் காவியம்" நூலினை வழங்கினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் உள்ளார்.

### 'திராவிட மாடல்' ஆட்சியில் இன்னும் பல திட்டங்கள்!

# தமிழ்நாடு சிறக்க ஒன்றிணைந்து செயலாற்றுவோம்!

## மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில் நடைபெற்ற ஆலோசனை குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளங்களில் பதிவு!

சென்னை, ஜூன் 13

சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில், திராவிட மாடல் அரசு இன்னும் பல புதிய திட்டங்களைக் கொண்டுவர உள்ளது என்றும், தமிழ்நாடு சிறக்க எல்லோரும் ஒன்றிணைந்து செயலாற்றுவோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான ஆய்வுக் கூட்டத்திற்கு பின் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிவுற்றதும் மக்களுக்கான சமூகநலத் திட்டங்களைச் செம்மைப்படுத்தும் ஆய்வுப் பணிகள் தொடங்கியது.**

**உங்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள நமது திராவிட மாடல் ஆட்சியில் தொடர்ந்து இன்னும் பல புதிய திட்டங்களைக் கொண்டுவரவுள்ளோம். நமது எண்ணங்களோடு, மாவட்ட ஆட்சியர்களின் உள்ளீடுகளையும் பெற்றுக் கொண்டோம்.**

**தமிழ்நாடு சிறக்க எல்லோரும் ஒன்றிணைந்து செயலாற்றுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### புதுச்சேரி ரெட்டியார்பாளையத்தில்

# விஷவாயு தாக்கி மூன்று பேர் உயிரிழப்பு!

## இழப்பீடு வழங்க எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா வலியுறுத்தல் !

புதுச்சேரி, ஜூன் 13-

புதுச்சேரி ரெட்டியார் பாளையம் புதுநகர் பகுதியில் பாதாள சாக்கடையில் இருந்து விஷவாயு அப்பகுதியில் இருந்த வீடுகளில் உள்ள கழிவறை வாயிலாக வெளியேறிய நிலையில் கழிவறைகளை பயன்படுத்திய ஐந்து பேர் விஷவாயு தாக்கப்பட்டு புதுச்சேரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர், அதில் 15 வயது சிறுமி செல்வராணி, 75 வயது மூதாட்டி செந்தாமரை, செந்தாமரையின் மகள் காமாட்சி ஆகிய மூன்று பேர் உயிரிழந்த நிலையில், ராஜேஷ்கண்ணன் மற்றும் பாக்கியலட்சுமி ஆகிய இருவர் அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

இதனிடையே விஷவாயு வெளியேறிய புதுநகர் பகுதியில் வசிக்கும் பொதுமக்களை ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தி அப்பகுதியில் இருந்து வெளியேற்றினர், தொடர்ந்து உழவர்கரை நகராட்சி அதிகாரிகள் முன்னிலையில் ஊழியர்கள் பாதாள சாக்கடை அடைப்புகளை சரி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து தகவலறிந்த சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, மக்களவை உறுப்பினர் வைத்திலிங்கம் ஆகியோர் சம்பவஇடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்ட மக்களிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் போதிய பராமரிப்பு இல்லை. புதுநகர் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்ட பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்தில் நச்சுக்கழிவு வாயு வெளியேறுவதற்கு தனியாக பைப் லைன் அமைக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அப்படி அமைக்கப்பட்ட பைப்-லைன்கள் பல இடங்களில் கசிவு ஏற்படுவதாக மக்கள் புகார் கூறுகின்றனர். அதை அதிகாரிகள் குழு தொடர்ந்து கண்காணித்து இருக்க வேண்டும். தவறிவிட்டதன் விளைவு இன்று மூன்று விலைமதிக்க முடியாத உயிர்களை நாம் இழந்துள்ளோம். புதுச்சேரி முழுவதும் பாதாள சாக்கடை திட்டம் தோல்வி அடைந்துள்ளது. ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் முதலில் பாதாள சாக்கடை திட்டத்தை மேம்படுத்தப்போவதாக அரசு தெரிவித்தது. ஆனாலும், 50 ஆண்டுகள் கடந்த நிலையில் நகரத்தின் பல்வேறு பகுதிகளில் பாதாள சாக்கடையில் அடைப்பு ஏற்பட்டு பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. ஆகவே அரசு இதை முக்கிய பிரச்சினையாக கருதி, தற்போது பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத்தை மேனிக்காக்க வேண்டும். அரசு துறையை முடிக்கி விட வேண்டும். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் முறையாக பம்பிக் செய்ய வேண்டும். இறந்தவர்களின் குடும்பத்திற்கு அரசு ஆறுதல் மட்டும் தெரிவிக்காமல் இறந்தவர்களின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க வேண்டும்.

இந்த ஆய்வின்போது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. செந்தில்குமார், எல்.சம்பத், தொகுதி செயலாளர் கலியகார்த்திகேயன் ஆகியோர் உடனிருந்தனர்.

# கேரள மாநிலம் இடுக்கியில் மண் சரிந்து விபத்து!

## காயம்பட்டோருக்கு மருத்துவமனையில் சிகிச்சை!

கொச்சி, ஜூன் 13–

கேரள மாநிலம் இடுக்கியில் தேசிய நெடுஞ்சாலை பணியின்போது மண் சரிந்து விழுந்ததில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கட்டுமான தொழிலாளர் மண்ணுக்குள் புதைந்தார். இடுக்கி அடிமாலி பகுதியில் தேசிய நெடுஞ்சசாலையில் நீர் வழி பாதைக்காக ஓடைகள் கட்டுமான பணி நடைபெற்று வந்தது. அந்த சமயத்தில் இரண்டு தொழிலாளர்கள் அப்பணியில் ஈடுபட்டிருந்தனர். தென்காசியைச் சேர்ந்த காளி சாமி, திருவனந்தபுரம் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த ஜோஸ் என்பவர்கள் அப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அச்சமயத்தில் அருகில் இருந்த மண் சரிந்து இருவர் மீதும் விழுந்தது. இதில் காளி சாமி முற்றிலும் மண்ணில் புதைந்தார். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் விரைந்து வந்த அடிமாலி தீயணைப்பு துறையினர் இரு தொழிலாளர்களையும் சிறு காயங்களுடன் மீட்டு அவர்களை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பிவைத்தனர். தொழிலாளர்கள் மண்ணில் புதைந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (11.6.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் தற்போதைய நிலை மற்றும் வரும் சட்டமன்ற கூட்டத்தொடரில் புதிய அறிவிப்புகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, காவல்துறை தலைவர் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு சாமுண்டீஸ்வரி, பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் எஸ்.அண்ணாதுரை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கூடுதல் செயலாளர் உமா மகேஸ்வரி, தாட்கோ பொது மேலாளர் (நிர்வாகம்) ப.நாராயணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோவையில் கழக முப்பெரும் விழா!

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!



நெல்லை, ஜூன் 13-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஜூன் 15 இல் கோயம்புத்தூர் முப்பெரும் விழா கொடிசியா மைதானத்தில் மாலை 4.00 மணியளவில் நடைபெறுகிறது. இந்த "முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்" நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்வீர் என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் முக்கிய வேண்டுகோள் அறிவிப்பு விடுத்துள்ளார்.

அது பற்றிய விவரம் வருமாறு.

வருகின்ற ஜூன் 15 ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும்,

1. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா.

2. நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா.

3. சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற திராவிட மாடல் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் "முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில் "நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

இக்கூட்டத்தில் நெல்லை கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகர்மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்றத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞரணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளரணி, மீனவரணி, நெசவாளரணி, பொறியாளரணி, மருத்துவரணி, வர்த்தக அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

### கோவை தி.மு.க. முப்பெரும் விழா!

# திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.வினர் அலைகடலென அணிவகுப்பீர்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



கோவை, ஜூன் 13-

ஜூன் 15 அன்று கோவையில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவிற்கு திருப்பத்தூர் மாவட்டக் கழக உடன்பிறப்புகள் அலைக்கடலென திரள்வீர் என திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கடந்த ஜூன் 8ம் தேதி சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா, 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி அளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா அறிவிக்கப்பட்டது.

ஜூன் 15 சனிக்கிழமை அன்று கோவை கொடிசியா மைதானத்தில் நடைபெற உள்ள விழாவில் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மற்றும் வெற்றி பெற்ற 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கிறார்கள்.

எனவே திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் நிர்வாகிகள், கிளை மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அலைகடலென திரண்டு வந்து கோவை முப்பெரும் விழாவினை சிறப்பித்திட கேட்டுக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பேரூர் ஆ. நடராஜன்

**ஜூன் 13 (2017)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டதோடு, தொழிலாளர்களுக்காக குரல் கொடுத்தவர்.

கழகத்தின் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துவக்க காலத்திலேயே, அதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கழக தொழிலாளர் அணிச் செயலாளராகவும் – தொ.மு.ச. பேரவைத் தலைவராகவும், தமிழ் மாநிலக்குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.

1977, 1984, 1989, 1996 ஆகிய நான்கு முறை பேரூர் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

"தொழிலாளர் நலனுக்காகவே தினசரி சிந்தித்து வாழ்ந்து வந்த ஒரு மாபெரும் தூணை இழந்து நிற்கிறது கழகம்" என கழக செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**